SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram: "GUARDIAN" JAFFNA. Telephone: No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

70-ம் புத்தகம் 21-ம் இல. யாழ்ப்பாணம் 1945-ம் ஆண்டு ஆனிமாசம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 5

## பாப்பரசர் நாஸியகொள்கையை கண்டிக்கிறார்

பதினொராம் பத்திநாதபாப்பானவர் 1937-ம்ஆண்டு உலகமுழுவதுக்கும் விடுத்த சாதாரணநிருபத்திலே நாஸியகொள்கைகளைப் பெரிதும் காரசாரமாகக் கண்டனஞ்செய்திருந்தார். அதன்மேல் இப்போதுதான் பன்னிரண்டாம் பத்திநாதபாப்பரசர் சென்ற 2-ந்திகதி சனிவாரம் கருதினல்மார் சங்கத்திலே உத்தியோகமுறையாக நாஸியகொள்கைகளைப் பிரசித்தமாகக் கண்டனஞ்செய்திருக்கின்றார். ஹிற்லர் சாகிய, சமயநிஷ்டூரன் என்பதைப் பாப்பரசர் ஐயந்திரிபில்லாது அழுத்தமாகக்கூறிப் பதினொராம்பத்திநாத பாப்பானவரைப் போலவே நாஸிய அட்டாதுட்டித்தனங்களைப் பகிரங்கமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். பாப்பரசரது உட்கருத்து முழுவதையும் எவ்விதசந்தேகத்துக்கும் இடம்வையாது வெளிப்படையாகக்காண்பிக்கும் திறவுகோல்போன்ற வாக்கியம் வருமாறு:—

"நரகஅலகையின் மாய்கைகளை நிகர்த்த நாஸிய கொள்கைகள் எல்லாவற்றையும்தூராதிதூரத்தில் வீசிவிட்டு ஜேர்மன்மக்கள் எல்லாரும் புத்துயிர்பெற்ற புதிதான சீவியத்துக்குத் தங்களை உயர்த்துவார்கள் என்ற நம்பிக்கை உடையேம்" என்பதுவே. இத்தாலியதேச கத்தோலிக்க அதிகாரிகள் இந்நாட்களிலே நாஸிய கொள்கைக்கும், பொதுவுடைமைக் கொள்கைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப்பற்றிப் பேசுவது வழக்கம். ஆனல், கருதினல்மார் சங்கத்திலே பாப்பரசர்ஆற்றிய சொற்பொழிவில் இவ்வித ஒற்றுமை வேற்றுமைகளைப்பற்றி அவர் ஒன்றுமே வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை.

பாப்பரசர் பன்னிருவருடம்ஜேர்மனியிலே தாம் சஞ்சரித்திருந்ததைஞாபகப்படுத்திப் பேசியதாவது:—"அக்காலத்திலே நாம் ஜேர்மனியர்களின் மகத்தான குணவிசேஷங்களை நன்குகற்று அறிந்துகொண்டோம். ஜேர்மன் தலைவர்களுடனும் அளவளாவி நன்ருய்ப்புழங்கியிருக்கிறேம். ஆதலால் ஜேர்மன்சாதியானது நரகஅலகையின் மாயாரூபத்தை நிகர்த்த நாஸிய கொள்கைகளை அறவே புறக்கணித்துவிட்டுப் புத்துயிர்பெற்ற புதியமகத்துவத்தை அடையுமென்ற நம்பிக்கை உடையோம்.

"1933-ம்ஆண்டு பரிசுத்த ஸ்தானத்துக்கும் ஜேர்மனிக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையாலே நாஸிய கொள்கைகள் திருச்சபையால் அங்கிகரிக்கப்படவேயில்லை ஆனல், இடையருது நடைபெற்றுக்கொண்டுவந்த நாஸிகளின் சமயநிஷ்டூரத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அவ்வுடன்படிக்கையானது ஒரு அடைக்கலஸ்தானம் போலாயிற்று. நாஸிகளின் சமயநிஷ்டூரத்தைப் பரிசுத்தஸ்தானம் எப்போதுமே கடிந்துவந்திருக்கிறது. மிருகத்தன்மையான வலோற்கார சக்திகளைக் கைக்கொண்டு ஜேர்மன்மக்களைச் சமயசம்பந்தமாய்த் திருகிக்கொன்றுவிடும் தன்மையான கண்ணிகளின் பிணிப்புகளை அக்காலத்தில் அழித்துவிடக்கூடியதாயிருந்ததோ என்று எவராவது முற்றமுடிவாக ஒன்றும்சொல்லமுடியாது. ஆனல், கத்தோலிக்க திருச்சபையானது நாஸிய கொள்கைகளால் விளையக்கூடிய கெடுதிகளை நேரகாலத்துடன் சுட்டிக்காட்டவில்லை என்று எவருமே குறைகூறப் பரிசுத்த ஸ்தானம் இடம்வைக்கவேயில்லை.

"உலகத்திலுள்ள சகல விஷயங்களையும், சமயசம்பந்தமான விஷயங்கள் சமய அனுஷ்டானத்தின் பெறுமதிகளைத்தானும் ஒருகோத்திரத்தின் அல்லது ஒருசனத்தின் அல்லது ஏதோ ஒரு நவீன அரசியல்முறையின் பரம அதிகாரத்துக்கு உட்படுத்தவேண்டுமெனச் சில அதிகாரிகள் வாதாடுகிறார்கள். வாதாடித் தங்கள்கொள்கைகளை ஏதோ ஒருவிக்கிரகம்போலக் கும்பிடவேண்டுமெனவும் சலஞ்சாதிக்கிறார்கள். இவர்கள் செயலானது சருவேசுரன்தாமே சிருட்டித்து ஒழுங்குபடுத்திய முறைகளை அறம்புறமாக்கிவிடுகின்றது. அத்தெய்வீக முறைகளைப் பொய்ப்படுத்திவிடவும் பார்க்கின்றது.

"இப்போது முடிந்த யுத்தத்திலே நாஸிய கொள்கைகளை ஒருபோதும் அநுசாரணைக்குக் கொண்டுவரப்படாதென நாம் சற்றுமே இளக்காரமில்லாது கண்டிப்பாய்க் கூறியிருக்கின்றேம். (இவைகளையும் நாஸிகளது நரகஅலகைகளின் போக்குநிறைந்த கொடுமைகள் நிஷ்டூரங்களை வெளியாக்கும் சில உதாரணங்களையும் பாப்பரசர் எடுத்துக்காட்டியபின்) நாஸிகளின் கொடுமைகளினல் பலியாக்கப்பட்டவர்கள், பன்னிரண்டு வருஷங்களாகத் தேவனுக்கும் திருச்சபைக்குமாகத் தங்கள் செல்வங்களையும் சுயாதீனத்தையும் உயிரையும்தானும் பரித்தியாகம் செய்திருக்கிறார்கள். இவர்கள் இப்போது அந்தநாஸிகளின் அக்கிரமங்களுக்குப் பரிகாரமாகத் தேவனை நோக்கிக் கைஉயர்த்தி மன்னிப்புக்கேட்கிறார்கள். மனுக்குலத்தவர்களுக்கு எதிராகவும், இப்போது ஜேர்மனியில் வசிப்பவர்களும் இனிமேல் வசிக்கப் போகிறவர்களுமான தங்கள் சொந்தச் சனங்களுக்கு எதிராகவும் நாஸிகள் செய்த கொடுமைகளுக்குப் பரிகாரமாக இவர்களுடைய வேண்டுதல்களை நீதியுள்ள நடுவன் ஏற்றுக்கொள்வாராக.

"நாஸிகள் இடைவிடாது கத்தோலிக்க திருச்சபையை விரோதித்து அதனை எதிர்த்துவந்திருக்கிறார்கள். இவர்களுடைய இப்படிப்பட்ட கண்டனைகளானவை, திருச்சபை எப்போதும் அவர்களுடைய அழிவுமலிந்த கொள்கைகளையும் அரசியல் முறைகளையும் துவேஷித்து வந்திருக்கிறது என்பதற்கு மறுக்கமுடியாத சாட்சியாகும். இந்த மகாயுத்தத்தின்போது குடும்பசீவியத்துக்கும், குடும்பஒற்றுமைக்கும் எதிராக மிகவும் செருக்குடன் செய்யப்பட்டுவந்த அநியாயங்கள் எல்லாம் முடிவுக்குவரும் என நம்புகின்றேம். இவ்வித செருக்கான, இறுமாப்பான செயல்கள் எல்லாம் பரலோகத்தை நோக்கிப் பழிவாங்கும்படி ஓலமிடுகின்றன. இவற்றாலே திருச்சபைக்கு மாத்திரமல்ல, மனுஷர் ஒருவருடன் புழங்கிக்கொள்ளுவதற்கு ஏற்றதான ஒற்றுமைக்கும் மகாதிடுக்காட்டம்விளைக்கும் கெடுதிகள் உண்டாகிப் பெருகிக்கொண்டு வந்திருக்கின்றன. இவ்வித அநியாயங்களினுற்றுன் பரதேசிகளாய், ஏழைகளாய், எவ்வித நம்பிக்கையுமில்லாதவர்களாயிருந்தவர்கள் ஏற்றில் மற்றும் புரட்டாகலகங்களுக்கு அடிகோலுபவர்களின் தொகையைப் பெருக்கி இப்போது அடிப்படுத்தப்பட்ட கொடுங்கோன்மையிலும் எவ்விதமும் குறைவுபடாத கொடுங்கோன்மைக்குக் காரணர் ஆவார்கள்."

உலகிற் சமாதானம் நிலவுவதற்கு அணிவகுக்கப்படவிருக்கும் விதிமுறைகளைப்பற்றிப் பேசியவிடத்துப் பாப்பரசர் "இந்தமகத்தான அலுவலிற் கையிட்டிருப்பவர்களை மனுக்குலம் முழுவதுமே ஆவலுடன் கண்ணேக்கியவண்ணமாக இருக்கிறது. இவர்களுடைய பிரயாசைகள் அநுகூலமாகாவிட்டால் மனுக்குலத்துக்கு நிகழும்கெடுதி எத்துணை பிரலாபத்துக்கு உரியதாகும். ஆனல், உள்ளபடி தகைமை உள்ளவர்களும், உத்தரவாதம் நிறைந்தவர்களும் கூறியிருப்பதை அவதானிக்குமிடத்து நீதியே வெற்றிபெறும் என நம்புதற்கு இடமுண்டு. அதுவும் அரசியற்சம்பந்தமாக மாத்திரமல்ல, சன்மார்க்க சம்பந்தமாயும் இந்தச்சமாதானத்தை நிலவச்செய்வது தங்கள் கடமை என்றும் அவர்கள் கூறுவதால் மேலும் எமது நம்பிக்கை அதிகரிக்கின்றது.

## அர்ச். தோமஸ் மோறப்பர் சரிதை

### III. எறஸ்மூஸ் உடன் நட்பு

காவை விடாது துயில் எந்தநாளும்;
கடிகமழும்
பூவைவிடாது மதுகாம்; தீயர் புடைக்
கினுமே
ஆவைவிடா திளங்கன்(று); அடியேன்
உன்னரியதிருச்
சேவைவிடாம லிருக்க வரமருள்
யேசையனே
(வேதநாயகம்பிள்ளை)

தொமஸ் மோறு தம்பிதாவின் ஏவலுக்கு இசைந்து நியாயசாஸ்திரத்தையே கவனமாய்ப் பயின்றுவந்தபோதிலும் பொழுதுவணங்கி என்று அழைக்கப்படும் சூரியகாந்திப் புஷ்பமானது சுடரோன் சென்ற திசைக்கெல்லாம் தலைவணங்கி நிற்றல்போல, அவர் மனமோ இலக்கியத்தையே என்றும் நாடி நின்றது. இதை அவர்தந்தை கவனித்துத் தம் எண்ணத்திற்குப் பங்கம்வருமென அஞ்சுகிறவரானார். ஆகவே, மோறுக்குத் தமது கற்குங்காலம்முழுதையும் சர்வகலாசாலையில் செலவழிக்கும் சிலாக்கியம் கிடைக்கவில்லை. ஒக்ஸ்வோட்டில் இரண்டுவருடம் இருந்தபின் அவர் தனியே நியாயசாஸ்திரம் கற்க லண்டனுக்கு தமது பதினறும் வயசில் அனுப்பப்பட்டார். அவர் அந்தச் சாஸ்திரத்தை "நியூ இன்" எனும் நீதிஸ்தல கலாசாலையில் ஆரம்பித்தார்.

இன்னும் இருவருடம். அப்பால் அவர் "லிங்கொல்ன்ஸ் இன்" எனும் நியாயஸ்தல சபையில் ஏற்கப்பட்டு வெளிப் "பரிஸ்தர்" நியாயவாதியானர். வெளிப்பரிஸ்தர்மார் கிராதிக்கு வெளியே உட்கார்ந்து வியாச்சியங்களில் பரிந்துபேச அதிகாரமற்றவர்களாயிருந்தாலும் அதில் ஒருவாறு பங்குபற்றுவார்கள்.

இங்கு முன்போலவே மோறுகையில் பணமில்லாதிருந்தது. அவ்வித கலாசாலைகளில் தருமநிதிகள் அமைக்கப்படாதிருந்ததால் அதிகப்பற்றுன மாணவர்கள் இவரைப்போலவே வெறுங்கையராயிருந்தார்கள்.

இன்றைக்கு "மோறு பாதை" எனப் பெயர்வழங்குமிடத்திற்கு அணித்தாக "சான்செறி லே"னில் அந்நாட்களை நினைப்பூட்டுகிற ஞாபகசின்னம் ஒன்று உண்டு. அங்கு எங்கள் வேதசாட்சியின் சிலையொன்று நிற்கிறது. அதின் கீழ் உள்ள கற்பலகையில் இவ்வசனங்கள் வரையப்பட்டுள்ளன:—

சேர் தொமஸ் மோறு நைற்பட்டத்தவர்.

சிலகாலம் இங்கிலாந்தின் பிரதம ஆலோசனைத் தலைமை ஆண்டவர்.

1535-ம் வருஷம் ஆடிமாசம் 6-ந் திகதி வேதசாட்சியானர். தேவனுக்கும் அரசனுக்கும் பிரமாணிக்கமுள்ள ஊழியன்.

மோறு இளம்பிராயத்திலதானே நீதிசாஸ்திர வியாக்கியானிபாய் நியமனம் பெற்று மூன்றுவருட காலமாக இவ்வுத்தியோகத்தைப் பார்த்தார்.

அவர் அர்ச். அகுஸ்தீன் எழுதிய "தேவனின் நகரம்" எனும் நூலைப்பற்றி ஓர் தேவாலயத்தில் பிரசாரம் செய்ததையும் அறிகின்றேம். அன்றுதொட்டு திருச்சபையின் ஆதிக்குரவர்கள், வேதபாரகர்கள் எழுதியவைகளை பயபத்தியோடு வாசித்து உணர்ந்திருந்தவருடைய பிரசாரங்களுக்கு லண்டனிலுள்ள பெரிய கல்விமான்களெல்லோரும், பேர்போன டக்றர் ஃறெசின் தாமும் வந்தார்கள் என்றால் அதிசயமாயிராது. தொமஸ் மோறின் பிரசாரங்கள் இதிகாச சம்பந்தமானவையேயன்றி வேதசாஸ்திரத்துக்கடுத்த பிரசங்கங்களல்ல.

இவ்வாறே அவர் அறிவிலும் கீர்த்தியிலும் முன்னேறலானர். இக்காலத்திலேயே இங்கிலாந்திற்கு வந்திருந்த இலக்கிய நிபுணரான றெட்டெர்டாம் நகர எறஸ்மூஸ் என்பவருடன் அவர் சிநேகம்பூண்டு, பின்பு இருவரும் உலகப்பிரசித்திபெற்ற நண்பர்களாயினர்.

எறஸ்மூஸ் எழுதிய கடிதங்களில், தமக்குப் பதின்மூன்று வயசுக்கு இளமையானவரில் தாம்கொண்ட அன்பான மதிப்பை வர்ணித்திருக்கிறார். அவ்வாலிபனிலும்பார்க்கச் சிறந்தமதுரமும் இன்பமுமான ஒரு குணசீலனை இயற்கையானது ஒருபோதும் உருப்படுத்தி அறியாது என்று வசனிக்கிறார்.

திருச்சபையில் இன்றைக்கும் வழங்கும் லத்தீன்பாஷையையே அக்காலத்தில் கற்றோர் சாதாரணமாய் வழங்குவார்கள். எறஸ்மூஸ் என்பவருக்கு ஆங்கிலேய பாஷையோ தெரியாது. பிற்காலத்தில் அடிக்கடி தமது சிநேகிதனை வீட்டில்சந்திக்கப் போனபோதுதானும் அவர் நாடோடிப்பேச்சை அறிந்துகொள்ளத் தேடவில்லை. ஆகவே தொமஸ் மோறுக்கு அவர் எழுதிய கடிதங்களெல்லாம் லத்தீனிலேதான். அவர் தம் சிநேகிதனுக்கு ஒக்ஸ்வோட் கலாசாலையிலிருந்து ஆதிநாட்களிலே எழுதிய ஒரு கடிதத்தில் பின்வரும் வசனங்கள் காணப்படுகின்றன.

"என்னருமையான மோறு அனுப்புவார் என்று நான் ஆவலுடன் காத்திருந்த காகிதங்களைக் காணுமல் மோசம்போனது ஒட்டனின் சோம்பலாலோ, அல்லது நம்பிக்கைத் துரோகத்தாலோ என்று எண்ணிக்கொண்டு அவனைத் தாராளமாய்த் திட்டினேன். உமது பக்கத்திலே நீர்தவறியிருப்பீரென்று நான் சந்தேகப்பட வேண்டியதில்லை, சந்தேகப்படவும்மாட்டேன். எனது கடைசிக்கடிதத்தில் அதைப்பற்றி மும்முரமாய்க் கண்டித்துப் பேசிவிட்டேனே. எனது மிகவும் இன்பமுள்ள மோறுக்குச் சுபசோபனம்" என்றெழுதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலாபத்துறை அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் கோவில் திருநாள்

இக்கோவிற்திருநாள் வழமைப்பிரகாரம் ஆனிமாசம் 10-ந்திகதி கொடியேற்றமாகி நவதின ஆராதனைகள் நடைபெற்று ஆனிமாசம் 19-ந்திகதி முடிவாகும்.

யாத்திரிகள் சமையலுக்காகிய உபகாரணங்களுடன் வரும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஜே. ஸ்கூர்மன்ஸ் O. M. I.
கட்டளைக்குரு

## பாமாலை

### அர்ச். அந்தோனியார் தோத்திரப் பாமாலை

பல நவீன சினிமாமெட்டுகள் அடங்கியவை

பாட்டுக்கச்சேரி நேரங்களிலும் சங்கீதவேளைகளிலும் பாடத்தகுந்தவை

ஒரு புத்தகம் விலை சதம் 10
தபாற்கூலி சதம் 3.

ஒரேமுறையில் ஒருடசின் வாங்குபவர்களுக்கு தபாற்கூலி உட்பட 2 புத்தகம் இனாம்.

விலாசம்:—
எஸ். எம். இன்னாசிமுத்து
மாஜி உபதேசியார்
நெம். 6. சவிரிமுத்துமுதலியார்ரோட்டு
யாழ்ப்பாணம்

## உப உணவுப் பொருள் விநியோகம்

இதன்கீழ்க் குறிப்பிடும் சாமான்கள் காட்டியுள்ள விநியோகப் பிரமாணப்படி, கூட்டுறவுச்சங்கங்களைத் தவிர்ந்த மற்றும் யாழ்ப்பாணக் குடாநாடு பூராவுமுள்ள சாமான் வாங்குபவர்களுக்கு 1945-ம்ஆண்டு வைகாசிமாசம் 21-ந்திகதி முதல் ஆனிமாசம் 17-ந்திகதி வரையில கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கசாலிப்பருப்பு | 6 | அவு. | ஒருஆளுக்கு |
| நிலக்கடலை | 6 | ,, | ,, |
| துவரம்பருப்பு | 2 | ,, | ,, |
| பச்சைப்பயறு | 2 | ,, | ,, |
| பச்சைஸ்பிளிற் பயறு | 1 | ,, | ,, |
| மல்லி | $\frac{3}{4}$ | ,, | ,, |
| வெந்தயம் | $\frac{1}{2}$ | ,, | ,, |
| நற்சீரகம் | $\frac{1}{4}$ | ,, | ,, |
| பெருஞ்சீரகம் | $\frac{1}{4}$ | ,, | ,, |
| புளி | 2 | ,, | ,, |

E. துணரட்னே
உபஅரசாட்சி ஏசன்று

கச்சேரி
யாழ்ப்பாணம் 6-6-45.

## அர்ச். பதுவை அந்தோனியார் திருநாள்

Wahacotte

சரித்திர சம்பந்தமான கத்தோலிக்க நாடாகிய இவ்விடத்தின் பாதுகாவலரான அர்ச். அந்தோனியார் திருநாள் 1945-ம் ஆண்டு ஆனிமாதம் 17-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாய்க் கொண்டாடப்படும்.

திருநாளுக்குமுன் நடத்தப்படும் நோவனை ஆனிமாசம் 1-ந்திகதி துவக்கப்படும் ஆனிமாசம் 16-ந்திகதிசனிக்கிழமை வேஸ்பர் பாடப்படும்.

கண்டி மேற்றிராணியாராகிய மகாவந். டீ. பீ. ரெஞோ ஓ. எஸ். பி. ஆண்டவரவர்கள் சமுகமளிப்பார்கள். குருமார் பலர் சமுகமாயிருப்பார்கள்

புகையிரத ஸ்தானம் மாத்தளை, மாத்தளையிலிருந்து வஹாக்கோட்டைக்குதூரம் 20 மைல். எப்போதும் பஸ்வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கும். கிடுகினால் செய்யப்பட்ட வாடிவீடுகள் (தனிஆளுக்கு, சமுசாரிகளுக்கு வேண்டியவர்கள் மே மாதம் 31-ந்திகதிக்குமுன் கேட்கக்கடவார்கள் விசேஷ நோவனை வேண்டியவர்களும் கேட்கக்கடவார்கள். ஒருநோவனைக்கு சலார் ரூபா 10 சதம் 50.

டீ. என். கேபலின், ஓ. எஸ். பீ
கட்டளைக் குருவானவர்
சென்ற் அன்றனிஸ் வஹாக்கோட்டை
மாத்தளை

# சத்தியவேத பாதுகாவலன்

1945-ம் ஆண்டு
ஆனிமாசம் 8-ந் திகதி

## கல்வித் திருத்தம்

கல்வித் திருத்தமென்று பிரஸ்தாபமாகச் சொல்லப்படுவதான புதிய கல்வித்திட்டம்பற்றிய விவாதம் அரசாங்கசபையிலே கடைசியாக ஒருவருடத்தின்பின் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அத்திட்டசம்பந்தமான சிபாரிசுப் பிரேரணைகளும், திருத்த பிரேரணைகளும் சபை அங்கத்தவர்களாலே ஆராயப்பெற்று, அவற்றிலே கொள்ளப்படவேண்டியனவும், தள்ளப்படவேண்டியனவும் இன்னனவெனச் சென்ற புதன்கிழமை முடிவுகட்டப்பட்டுவிட்டன. முந்தச் சமயஸ்தாபன பாடசாலைகளைப்பற்றிய பிரேரணையே ஆராயப்பட்டது. சமயஸ்தாபன பாடசாலைகளும், அரசினர்பாடசாலைகளும் அக்கபக்கமாகவிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கவேண்டுமென்றே கல்விவிசாரணைக் கொம்மிற்றியார் சிபாரிசுபண்ணியிருந்தார்கள். அரசாங்கசபையிலே இவ்விஷயம் ஒன்றரைமணி நேரமாக விவாதிக்கப்பெற்றுக் கடைசியாகத் தற்போது இருந்துவருகிற சமயஸ்தாபன பாடசாலைகள் இனிமேலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உதவிப்பணம் பெறும் பாடசாலைகள் எல்லாவற்றிலும், அரசினர் ஆசிரிய கல்லூரிகள் உட்பட அரசினரின் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குப் பெற்றார் சேர்ந்துள்ள சமய கல்விஊட்டப்படவேண்டுமென்பது மற்றோர் தீர்மானமாகும். ஓர் சமயஸ்தாபன பாடசாலை விஷயமாய் அப்பாடசாலையில் சேர்ந்து படித்துவரும் அதே சமயப் பாடசாலைப் பிள்ளைகளுக்கே அரசினரின் உதவிப்பணம் கொடுபடவேண்டும்; ஏனைய சமயப் பிள்ளைகளுக்கு அந்தஉதவிப்பணம் கொடுக்கப்படாதென்று தலதாபன மந்திரியார் கொண்டுவந்த திருத்த பிரேரணைக்குச் சார்பாக அங்கத்தவர்களிலே 16 பேரும், மாறாக 29 பேரும் சம்மதிச்சீட்டுகள் கொடுத்தமையால் அப்பிரேரணை தட்டுப்பட்டுப்போயிற்று. இலவசகல்வி விஷயமாய், உதவிப்பணம்பெறும் ஆரம்ப பாடசாலைகளிலோ, அரசினர் ஆரம்பபாடசாலைகளிலோ, ஆசிரிய கல்லூரிகளிலோ, கமத்தொழில்—வாத்தக பாடசாலைகளிலோ, சர்வகலாசாலையிலோ எல்லாவற்றிலும் பிள்ளைகளிடம் சலார் வாங்கப்படாதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறுகப் புதிய கல்வித்திட்ட சம்பந்தமாய் அரசாங்க சபையில் எத்தனையோ பிரேரணைகள் அரங்கேறியிருக்கின்றன. சென்றவாரம் சபையின்முதல்வரான திரு. டி. எஸ். சேனநாயக அவர்கள் சபையிலே கேட்டபடி இனி நடக்கப்போவதென்ன? கல்வித்திருத்த விஷயமாய் அரசாங்கசபையில் நடைபெற்ற விவாதத்தின் விளைவு யாதாகும்? சபை முதல்வர்தாமும் அறியமாட்டார். எல்லாம் இலங்கையின் வருமான நிலையிலேயே தங்கியிருக்கிறது. இந்த வருமானம் எக்காலமும் ஒரேமாதிரியாய்இருப்பதல்ல. இந்த யுத்தகாலத்திலே அது வெகுவாக அதிகரித்துச் செலவுக்குக்கண்டு எஞ்சிவருகிறது. யுத்தம் முடிந்தபிறகு முன்னர்போலப் பொருளாதார மந்தமென ஒன்றுவரலாம். அப்போது வருமானம் செலவுக்குப்போதாமல் திண்டாடவேண்டிவரும். கல்வித்திருத்த சம்பந்தமாய் அரங்கேறியிருக்கும் பிரேரணைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் விஷயமாய் அரசாங்கசபை ஓர் நியதியான காலத்தைக் குறிப்பதற்குச் சம்மதிக்கவில்லை. ஆரம்பபாடசாலைகள்முதல் சர்வகலாசாலை வரையிலே இலவச கல்வி[illegible] கேறியுள்ளசகல[illegible] வேற்றிவைக்கிறதென்றால், அரசிறை வருமானத்தில் அதிகமான பகுதியை அவற்றிற்கே செலவிடவேண்டிவரும். கல்விமந்திரியாரான திரு. கன்னங்கரா அவர்கள் தனது கல்வித்திருத்த பிரேரணைகள் ஓர் அளவிலே அரங்கேறிவிட்டமையையிட்டுப் பெருமையடிக்கலாம். ஓர்வேளை அவர் எதிர்பார்த்திருந்த பிரேரணைகள் சில அரங்கேறாமல்போனமையையிட்டு மனமடிவெய்தலாம். இன்னும் அவரது கல்வித்திருத்தம் கடுந்ததிருத்தமாகிச் சிலவேளை கல்விவிருத்திக்கே பங்கம் ஏற்படலாம். எல்லாம் காலந்தெரிவிக்கும்.

## குருத்துவ வெள்ளியூபிலி

மகாவந். புறோ ஆண்டவர் யாழ்ப்பாண மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பெற்றுவந்தபின் அவரதுதிருக்கரங்களாலே 1920-ம்ஆண்டு பங்குனி மாசம் 20-ந்திகதி முதன்முதலாகக் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றவரும், தற்போது காரம்பன் அர்ச். செபஸ்தியார்கோவில் விசாரணைப்பங்குக் கட்டளைக்குருவாய் இருந்துவருகிறவருமான வண. பி. ஏபிரகாம் சுவாமியாரின் குருத்துவ இருபத்தைந்தாம்வருட வெள்ளியூபிலிவிழா சென்ற பங்குனி மாசம் 20-ந்திகதி தபசுகாலத்திலே வந்துபோயிற்று. ஆடம்பரமோ, ஆரவாரமோ எதையும் அறவேதுவேஷிப்பவரான சுவாமியார் தபசுகாலத்திலே தமது யூபிலி வந்ததையிட்டுச் சந்தோஷித்திருந்தார். ஆனால், அவர்மாட்டுத் தமக்குண்டான அன்பையும் நன்றியறிதலையும் பிரசித்தமாகக் காண்பிக்குமாறு ஆனவோர் சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவரது ஞானமக்களோ யூபிலிவிழாவைப் பின்போட்டு அதனை நாளை 9-ந்திகதி சனிக்கிழமை கொண்டாடவிருக்கின்றார்கள். வண. யூபிலிநாயகர்அவர்கள் கடந்த இருபத்தைந்து வருடங்களிலும் மிகுந்த தேவதோத்திர வாஞ்சையோடும், ஆத்தும இரட்சணிய அபேட்சையோடும் திருத்தொண்டாற்றித் தமக்கு இயல்பாயுள்ள தவப்போக்காலும், தருமசிந்தையாலும், போதனையாலும், சாதனையாலும், அன்பாதரவாலும், அனுதாபகுணத்தாலும் எத்தனையோபேரை நல்வழிப்படுத்தியிருக்கின்றார். எத்தனையோ பேருக்கு ஆறுதலளித்திருக்கின்றார். எத்தனையோ ஏழைகளின் கண்ணீரைத் துடைத்திருக்கின்றார். கத்தோலிக்கரை மாத்திரமல்ல, ஏனைய சமயத்தவர்களையுமே தம்பால்கவர்ந்து அவர்களாலும் வெகுவாக நேசிக்கவும் சங்கிக்கவும்பெற்று வந்திருக்கின்றார். ஆகவே, இந்த யூபிலியை அவர் காணவைத்த—சென்ற கால்நூற்றாண்டிலும் தமது திருவருட்பிரசாதங்களைப் பொழிந்து அவரது திருத்தொண்டுகளை ஆசீர்வதித்த சருவேசுரனுக்கு இந்தவேளை அவருடன்சேர்ந்து நமதுநன்றியறிந்ததோத்திர நமஸ்காரங்களைச் சமர்ப்பித்து, சுவாமியாருக்கு யூபிலிச் சோபனம்கூறி அவரது ஆசீர்வாதத்தை வேண்டிநிற்கின்றோம்.

## வண. ஆசீர்வாதம் சுவாமியார்

தலைமன்னார்க் கட்டளைக் குருவாயிருந்து தொண்டாற்றிவருங்கால் தமக்கு ஏற்பட்ட இரணங் காரணமாகச் சிலமாசங்களின்முன்னர் சத்திரவைத்தியஞ்செய்து தமது இடதுகாலின் பிரதான பாகம் நீக்கப்பெற்றுக் குணமடைந்திருப்பவரான வண. எஸ். ஆசீர்வாதம் சுவாமியார் சென்ற தைமாசம் தொடக்கமாகத் திவ்விய பூசைப்பலி நிறைவேற்ற இயலாதவராய் இருந்துவந்தார். ஆனால், உட்கார்ந்தபடியே திவ்விய பூசைப்பலி நிறைவேற்றச் சுவாமியாருக்குப் பரிசுத்த பாப்பாண்டவர் தமது அப்போஸ்தொலிக்க ஸ்தானாபதி மூலமாக விசேஷ அனுமதி அளித்திருப்பதிலிருந்து, சென்ற 6-ந்திகதி புதன்கிழமை தொடக்கம் அவர் மீண்டும் பூசைப்பலி நிறைவேற்றி வருகின்றார். இந்த விசேஷசுதந்திரம் தமக்குக் கிடைக்கும்படியாய்த் தமக்காக மன்[illegible] எல்லாருக்கும் [illegible]இருதய அன்புடனும் நன்றித்துதி கூறுவதுடன் தம்மோடு சேர்ந்து சருவேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் கூறும்படியாகவும் அவர்களை மிகவும்பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றார். நிற்க, தாம் முன்போல நடந்துலாவித் திருத்தொண்டாற்றிவர முடியாமற்போனதையிட்டுச் சுவாமியார் மனஞ்சோராது தேவசித்தத்துக்குப் பணிந்தமனத்தினராய் இப்போதும் தம்மால்ஆனவைகளை இருந்த இரையிலே ஊக்கமாகச் செய்துவருகின்றார். இனி, கால் இடங்கொடாதிருந்தும் கை இடந்தருகிறவரையிலே ஏதேது தொண்டாற்ற முடியுமோ அதையெல்லாம் ஆற்ற முயன்றுவருகின்றார். சிறந்த பிரசங்கியாரான அவர் இனிமேல் ஓடியு[illegible]விப் பிரசங்கஞ் செய்ய முடியாதி[illegible]தும் ஆங்கில, பிராஞ்சிய, லத்தீன[illegible] பாஷைகளிலுள்ள அருமையான [illegible]சங்கங்களையும், மற்றும் வேத நூல்களையும் கறகறென்று தமிழிலே இசைத்தெழுதி வருகின்றார். தமதுநாமம் வெளிவராது நம்பத்திரிகைக்கும் விஷயதானம் கிரமமாகச் செய்துவருகின்றார். தம்மை நாடி வருவாருக்கு ஆறுதலும், ஆலோசனையும் கூறிவருகின்றார். இந்த அருமையான குருப்பிரசாதி சுகபலத்துடன் நம்மத்தியில் நெடுங்காலம் இருந்துவரத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப்,பிரார்த்திக்கின்றோம்

## அரசாங்கசபை முதல்வர்

இலங்கை அரசியற்திருத்த விஷயமாய்க் கலந்து ஆலோசிக்குமாறு குடியேற்றநாட்டு மந்திரியார் எமதுஅரசாங்கசபை முதல்வரான திரு. டி. எஸ். சேனநாயகஅவர்களை லண்டன் மாநகருக்கு அழைத்திருப்பதாகத் தினவர்த்தமானிகள் சில பெரிதும் ஆர்வத்துடன் கூச்சலிடுகின்றன. இந்த "அழைப்பு"க்கு உற்பத்தி ஸ்தானம் குடியேற்றநாட்டு மந்திரியார்தானோ அன்றேல் எமது கமத்தொழில் மந்திரியார்தானோவென்று ஊன்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. திரு. சேனநாயக அவர்களுக்கு மிண்டுகொடுக்கும் பத்திரிகைகள் "அழைப்பு" என்று கூறுவதுபற்றி அவர்தானே கூறும்விபரம் வருமாறு: "மன்னர்பிரானின் அரசியல்அதிகாரிகள் எமதுஅரசியல் திருத்தங்களை ஓர் முடிவு செய்வதற்குமுன் அரசாங்கசபை முதல்வர் என்றமட்டிலே விவாதத்துக்கிடனுகிய சகல விஷயங்களையும்பற்றி என்னுடன் கலந்து ஆலோசிக்கும் சந்தர்ப்பம் தமக்குக் கிடைக்கவேண்டுமென்ற கருத்தும், நம்பிக்கையும் உள்ளாரெனத் தேசாதிபதி எனக்குத் தெரிவித்திருக்கிறார். அவ்விஷயங்களைப் பற்றிக் கலந்தாலோசிக்கும்படியாய் நான் என்னைஉபயோகப் படுத்துவேனென்று தாமசமில்லாது ஒப்புக்கொண்டுவிட்டேன்" என்பதுவே திரு. சேனநாயகாவின் அறிக்கையிலே "அழைப்பு" என்பதுபற்றிய மணமும் இல்லை, நிறமும் இல்லையென்பதை எவரும் இலகுவில் கண்டுகொள்வர். அதிலே குடியேற்றநாட்டு மந்திரியாரின் கருத்தைப்பற்றியும், நம்பிக்கையைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறதல்லாது, எந்த மூலைமுடக்கைத் தடவிப் பார்த்தாலும் "அழைப்பு" என்பது மருந்துக்குமே கிடையாது. குடியேற்றநாட்டுமந்திரியார் தம்மை அழைத்திருந்தால். "என்னை அழைத்தார், நான் ஏற்றுக்கொண்டேன்" என்று நேரே சொல்லிவிடலாமே. விவாகோற்சவம் ஒன்றிற்கு ஒருவர் நம்மை அழைத்தால், "சந்தோஷம், கட்டாயம் வருவேன்" என்று பதில் அளிப்பதற்குப் பதிலாக "விவாகோற்சவத்தில் நான் உபயோகமுள்ளவனுக இருக்கச் சம்மதித்துக்கொண்டேன்" என்று சொல்லும் பண்டித சிரோமணிகளும் உண்டா?

---

இலங்கைக்கு மா—அநேக வருடங்களுக்குப் பிறகு முதன்முதலாக இலங்கைக்கென்று பெருந்தொகையான கனடாக் கோதுமை மா மொன்றீயல்துறைமுகத்திலிருந்து இரு பிரித்தானிய கப்பல்களில் ஏற்றப்பட்டிருப்பதாயும். இவைகள் வருகிறவாறம் அங்கிருந்து பிரயாணப்படுமென்றும் செய்தி கிடைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

கொலம்பகம் சஞ்சூசையப்பர் போதனுகழகப் பிரவேசத்தெரிவுப்பரீட்சை நிகழும் ஆனிமதி 18-ம் 19-ந் திகதிகளில் மேற்படிகழக முகாமைக்காரரால் போதனுசாலை மண்டபத்தில்நடத்தப்படும்.

பரீட்சார்த்திகள் 18-ந்திகதிகாலை 10 மணி தொடக்கம் மாலை 2 மணி வரையும் எண்கணிதம், பாஷைஇலக்கியம், விவேகப்பரீட்சை என்பவற்றில் பரீட்சிக்கப்படுவர்.

19-ந்திகதி காலை [illegible] மணியளவில் நேர்முகப்பரீட்சை [illegible]ம்பமாகும். மாணவர் தத்தம் [illegible]ணைப்பங்குக் கட்டளைக்குருமாரிட[illegible] பெற்ற நற்சாட்சிப்பத்திரமும், [illegible]றப்புப்பத்திரமும், சி. பா. த. வகுப்[illegible] பத்திரமுங் கொண்டுவரவேண்டும்.

இப்பரீட்சைக்குத்தோற்றத் தகுதி வாய்ந்த கத்தோலிக்க மாணவர் எல்லோரும் தவருது இதில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வண. L A. சிங்கராயர் O. M. I.
தாபனத்தலைவர்

---

## இளவாலை ஆசிரிய கல்லூரி

### பிரவேசத் தேரிவுப் பரீட்சை 1945

1946-ம் ஆண்டு தைமாதம் இளவாலைக் கன்னியர்மட ஆசிரிய கல்லூரியிற் சேர்ந்து பயிற்சிபெற விரும்பும் வித்தியார்த்திகள், 1945-ம்ஆண்டுஆனிமாதம் 23-ந்தேதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி கல்லூரிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்குச் சமு[illegible]ங்கொடுக்கவேண்டியது. அத்தருணம் (1) பாஷையும் இலக்[illegible]யமும், (2) ஆரம்ப கணிதவகை, (3) பொதுவிவேகப்பரீட்சை என்பவற்றில் பரீட்சிக்கப்படுவார்கள்.

பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பப்பத்திரங்களுடன் (1) நடத்தைப்பத்திரம் (2) பிறப்புப்பத்திரம் (3) S.S.C. தாரதரப்பத்திரம் என்பவற்றையும்அனுப்பிவைக்க வேண்டியது. நடத்தைப் பத்திரங்கள் கடைசியாகப் படித்தபாடசாலை முகாமைக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவாதல் வேண்டும்.

**கவனிப்பு:**—ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமும் முறையாக நிரப்பப்பட்டும், 7 ரூபா 50 சதம் பெறுமதியான கைச்சாத்திடப்பெற்ற முத்திரை அணைக்கப்பெற்றும் "றெஜிஸ்ரர்" செய்யப்பெற்ற தபால்மூலம் General Manager of R. C. Schools, Bishop's House, Jaffna எனும் விலாசத்திற்கு 1945-ம்ஆண்டு ஆனிமாதம் 18-ந்தேதி[illegible]க்குப் பிந்தாது அனுப்பப்படவேண்டியது. பிந்திய விண்ணப்பப்பத்திரங்கள் 10 ரூபா பெறுமதியான முத்திரை அணைக்கப்பெறின் ஆனிமாதம் 30-ந் தேதிவரை ஏற்கப்படும்.

Revd. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai,
Tellipalai.

Holy Family Convent,
Ilavalai, 1-6-1945.

---

## நன்றியறிந்தஸ்தோத்திரம்

நானெடுத்த பரீட்சைகள் யாவும் அமலோற்பவ ஹா்துநாயகி, பொம்பேயி மாதா, அர்ச். சவேரியார், அர்ச். றீத்தம்மாள், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். சின்னத்திரேசம்மாள், அர்ச். அந்தோனியார் இவர்கள் மூலமாகச் சித்தியடைந்தேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன். இதைக்கண்ணுறும் வாசகர்களும் அவர்களுக்கு நன்றியறிந்தஸ்தோத்திரம் செய்யுமாறு விநயமாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mannar Miss M. Mark

---

## சுதேசவர்த்தமானம்

**குருத்துவ வெள்ளியூபிலி**—சம்பத்திரிசியார் கல்லூரித் தலைவராய் விளங்கும் அதிவண. ரி. எம். எவ். லோங் எம். ஏ. சுவாமியார் குருத்துவாபிஷேகம்பெற்ற இருபத்தைந்தாம்வருட வெள்ளியூபிலி விழாக் கொண்டாட்டம் இம்மாசம் 14-ந் திகதியாகிய வருகிறவியாழக்கிழமைமுதல் 16-ந்திகதி சனிக்கிழமை வரையிலே நடக்கவிருக்கிறது. வியாழக்கிழமைகாலை 7.30 மணிக்கு யூபிலிநாயக சுவாமியார் ஆசனக் கோவிலிலே பெரிய பாடற்பூசை நிறைவேற்றுவார். அன்று பிற்பகல் 3 மணிக்குச் சென் மாட்டீன் குருமட மைதானத்திலே பந்தையவிளையாட்டுகள் ஆரம்பமாகும். 6. 30 மணிக்கு அங்குதானே தோட்டோபசாரணையும், பழைய மாணவர்களின் வரவேற்பும் நடந்தேறும்.

**நற்கருணைத் திருநாள்**— இத்திருநாள் நம்முடைய ஆசனக்கோவிலிலே சென்ற 3-ந்திகதி ஞாயிறுவாரம் வழமைபோல அதிசிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 7.30 மணிக்கு அதிவண. எவ். எம். விசியன் சுவாமியாரால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் நம் மேற்றிராணியாண்டவர் அநேக குருப்பிரசாதிகள் சமேதராய் எழுந்தருளி வேஸ்பர் பாடியதன்மேல் கதிர்ப்பாத்திரத்தைக் கரத்தேந்தித் திவ்விய சற்பிரசாதநாதரை வீதியெழுந்தருளச்செய்தனர். பக்தர்குழாங்கள் புடைசூழ்ந்து செபங்கள் ஓதியும், திவ்விய கீதங்கள் பாடியும், புஷ்பாஞ்சலி செய்தும் நிற்க, அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாகச் சற்பிரசாத நாதர் திருப்பவனிகொண்டார். சந்தியோகுமையோர்கோவில் முன்றிலிலும், சென் மாட்டீன் குருமடத்துப் பெரியவாயிலிலும் அமைக்கப்பெற்றிருந்த சித்திரப்பந்தர்களிலே திவ்விய நற்கருணை எழுந்தருளச்செய்து ஆசீர்வாதம் அருளப்பெற்றது. ஈற்றிலே ஆசனக்கோவிலில் அருளப்பெற்ற ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிது முடிவாயிற்று.

**டக்றர் ஜே. பி. அன்ரனி** — நம் பட்டினவாசரான ஆசிரியர் திரு. ரி. எம். அன்ரனி அவர்களின் சிரேஷ்ட புதல்வரும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவருமான டக்றர் ஜே. பற்றிக் அன்ரனி அவர்கள் உத்தியோக உயர்ச்சிபெற்று நிகழும் ஆனிமாசம் 1-ந்திகதி தொடக்கம் திரிகோணமலைப் பெரும்பாக எம். ஓ. எச். ஆக, அதாவது சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறுரென அறிந்து சந்தோஷமானேம். இவர் சென்றவருட ஆனிமாச முதல் அங்கு உதவி எம். ஓ. எச். ஆக நியமனம்பெற்றிருந்து கழுத்துறைச் சுகாதாரகழகத்திலே பகிரங்க சுகாதாரத்திலும், மலேரியாவைத் தடுக்கும் வேலையிலும் சமீபத்திலே விசேஷபயிற்சிபெற்றிருக்கின்றுர்.

**பர்மா அரிசி நேல்**— சமீபத்திலே கொழும்பிலிருந்து ஓர் ஆகாயவிமானத்தில் றங்கூனுக்குச்சென்று திரும்பியவரும், 'ரைம்ஸ்' பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான திரு. ஏ. சி. ஸ்ரிவாட் அவர்கள் பர்மாவில் ஏராளமான அரிசி நெல் இருப்பதாகவும், யப்பானியர் அந்நாட்டைவிட்டு வெளியேறியபோது அரிசி நெல்லைக் கைவிட்டுப்போகவே பர்மியர்கள் அவற்றைச் சேகரித்து வைத்திருப்பதாகவும் கூறுகின்றுர். அதனுல் நமது அரசினர் அங்கிருக்கும் நெல், அரிசியில் ஒருபகுதியைப் பெற்றுக்கொள்ள முயன்ருலோ!

**அதிகமான கஷ்டநிவாரணம்**—யப்பானியர் அடிப்படுத்தியுள்ள நாடுகளிலே தற்போது இருந்துவருகின்ற இலங்கையாரின் மனைவிமாராய், மற்றும் அவர்களிலே சீவனத்துக்குத் தங்கியவர்களாய் இலங்கையிலே வசித்துவருவாருக்கெல்லாம் அரசினர் கூடியகஷ்டநிவாரணம் அளிக்கவேண்டுமெனத் தீர்மானமாயிருக்கிறது. அதாவது ஓர் மனைவிக்குக் குறைந்தபட்சம் மாசவீதம் 15 ரூபாவும், பதினறுவயசுக்கு உட்பட்டவர்களாய்ப் பாடசாலைக்குப்போகும் ஒவ்வோர்பிள்ளைக்கும் 10 ரூபாவும் கொடுபடவேண்டுமென்று சிபாரிசுபண்ணத் தொழில் - கைத்தொழில்-வர்த்தக மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது

**புடவைப்பஞ்சம் ஏற்படுமா?**— ஜேர்மனியர், யப்பானியரிடமிருந்து ஐக்கிய தேசங்கள் பல நாடுகளையும் விடுவித்ததோடு இலங்கைக்கு அனுப்பப்பட்டுவந்த புடவைகளில் ஒருபகுதி அந்நாடுகளுக்குச செல்லும்போல இருக்கிறது. விசேஷமாகப் பர்மாவுக்கும், பிந்த மலாய்நாடுகளுக்கும் தேவையான புடவைகளை இந்தியா அனுப்பவேண்டியதாய் இருக்கிறது. அதனுல், இவ்வாண்டின் இரண்டாவது கால்வருடமாகிய சித்திரை, வைகாசி, ஆனி எனும் மூன்று மாசங்களிலும் இலங்கைக்குப் பிரித்தானிய இராச்சியம் அனுப்பவேண்டிய பருத்திப்புடவையை 105 தொன்னிலிருந்து 35 தொன்னுகவும், இந்தியா அனுப்பவேண்டிய புடவையை 1,100 தொன்னிலிருந்து 905 தொன்னுகவும், அமெரிக்க ஐக்கியதேசம் இவ்வருடத்திலே அனுப்பவேண்டிய 1 கோடியே 39 லட்சத்து 96 ஆயிரத்து 200 யாரைத் 90 லட்சத்து 20 ஆயிரம்யாராகவும் குறைத்திருக்கின்றன. ஆகவே, தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிடின் இவ்வாண்டின் பிற்பகுதியிலே புடவைப்பஞ்சம் ஏற்படுமாம்.

---

விற்றே

சுகந்தரும் மதுரபானமேயன்றி
அது ஓர் பரீட்சார்த்த பானமன்று.

சரீர ஆரோக்கியத்தை அளிக்கக்கூடியனவும்
மனதுக்குவந்தனவுமான பொருடகளைக்கொண்டு
சாஸ்திரமுறையாகத் தயாரிக்கப்பெற்றிருக்கின்றது.

இலேசான பானவகைகளை விரும்புவோர்
விற்றேவையல்லாமல்
வேறு பானவகையைக் காணமுடியாது

"விற்றே" செய்கைக் கம்பெனி
தந்தி:— "விற்றே" டெஹிவலை

சில்லறை விற்பனையாளர்:
எல். எஸ். இராசநாயகம்
13, சவிரிமுத்து முதலியார் றேட்டு
யாழ்ப்பாணம்

---

## பழக்கமும் பரவணியும்

"காற்றடி"

* 'ஈழகேசரி'யிலே 'கொண்டோடி'யின் புதினங்கள் தொடர்ந்து வெளியாகிக்கொண்டே வருகின்றனவாம்.

* "கீழ்மாகாணப் பிரதிநிதிக்குஎழுத்தறிவித்தவர்கள் கிறிஸ்தவர்களாம்" என்று கொண்டோடி எழுதுகிருராம்.

* கீழ்மாகாணத்துக்குப் பிரதிநிதி ஒருவரென்றுதான் கொண்டோடி எண்ணிக்கொண்டிருக்கிருராம்.

* கீழ்மாகாணத்துக்குப் பிரதிநிதி ஒருவர்அல்ல இருபிரதிநிதிகள் இருக்கின்றனராம்.

* அந்தக் கீ. மா. பிரதிநிதிக்கு மாத்திரமல்ல, வேறும் எத்தனையோ பிரதிநிதிகளுக்கு எழுத்தறிவித்தவர்கள் கிறிஸ்தவர்களாம்.

* "இந்துக்களையும் பௌத்தர்களையும் மேய்த்தெடுத்தவர்களும் கிறிஸ்தவர்கள்தான்" என்று கொண்டோடி ஓர் செய்தி கொண்டோடிவருகிருராம்.

* ஆகவே, தன்னையும் மேய்த்தெடுத்தவர்கள் கிறிஸ்தவர்களென்று கொண்டோடி ஒப்புக்கொள்ளுகின்ருராம்.

* அப்படியான கிறிஸ்தவர்களை மேய்த்தெடுத்துவிடுமாறு கொண்டோடி சங்கநாதங்கொண்டாடுகின்ருராம்.

* கிறிஸ்தவர்களிலே வலியச்சுரண்டுவது கொண்டோடிக்கு ஓர் பரவணிப் பழக்கம் ஆகிக்கொண்டதாம்.

* தமிழ்வீரர் சீமைக்குத் தூதுபோகிருரென்று 'பாட்டைசாரி' தந்தனுப்பாடித் தம்பட்டம்அடிக்கத் தொடங்கியிருக்கிருராம்.

* அவர் "பிரயாணத்துக்கு மூட்டைமுடிச்சுகளையும் கட்டிவிட்டார்" என்று பாட்டைசாரி ஒரேமூச்சாய்ப் பாடுகிருராம்

* தமிழ்வீரர் ஜி. ஜி. அவர்களின் மூட்டைமுடிச்சுகளைச் சுமந்துபோய்க் கொடுக்கப் பாட்டைசாரி தவங்கிடக்கின்ருராம்

* ஜி. ஜி. அவர்களுடன் குரங்குச்சேட்டை நடத்துவது பாட்டைசாரிக்கும் ஒரு பரவணிப்பழக்கம் ஆகிவிட்டதாம்.

* 'சைவ வித்தியாவிருத்திச் சங்க'த்தின் (இந்துபோர்ட்) காரியதரிசி திரு. சு. இராசரத்தினம் அவர்களாம்.

* கிறிஸ்தவர்கள் சிறந்த லௌகிகக் கல்வியைப் புகட்டுகிருர்களென்று இப்போதுமே திரு. சு. இ. ஒப்புக்கொள்ளுகிருராம்.

* இந்துக்கள் சிறந்தகல்வியைநாடித் தமது குழந்தைகளைக் கிறிஸ்தவர்களிடம் ஒப்படைப்பதாகவும் சு. இ. சொல்லுகிருராம்.

* திரு. சு. இ. அவர்கள்தானும் கிறிஸ்தவர்களிடமே சிறந்த கல்வியைப் பெற்றுக்கொண்டனராம்.

* அப்போது யாழ்ப்பாண இந்துக் கல்லூரி இருந்தும் அதற்குச் சு. இ. அனுப்பப்படவில்லையாம்.

* "கிறீஸ்த சமயத்தவரின் வலை"ஒன்றையும் இப்போது சு. இ. இழுக்க முன்வந்திருக்கிருராம்.

* இந்துப்பெண் அநாதசாலை ஒன்றுக்குப் பதினையாயிரம்ரூபா தேவைப்படுகிறதாம். அதைச் சேர்ப்பதற்காகச் சு. இ. "கிறீஸ்தசமயத்தவரின் வலை"யை இழுக்கத்தொடங்கியிருக்கிருராம்.

* ஒருநூறு பிள்ளைகளுக்கு ஓர் அநாதசாலையைக் கட்டியபோதிலும் இன்னும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் "கிறீஸ்த சமயத்தவரின் வலையில் அகப்பட" இடமிருக்கிறதாம்.

* இந்து அநாதபிள்ளைகள் அநேகர் "கிறீஸ்த சமயத்தவரின் வலையில் அகப்படநேரிடும்" என்று சு. இ. எழுதுவதிலும் ஓர் தந்திரம் இருக்கிறதுதானும்.

* கிறீஸ்த சமயத்தவரின் வலையை இழுத்து ஏலோச் சொன்னல்தான் இந்துக்கள் அபிமானங்கொண்டு அநாதசாலைக்குப் பணம்கொடுப்பாராக்குமாம்

* உள்ளநியாயத்தை இந்துசமய அபிமானிகளுக்கு எடுத்துச்சொல்லுமிடத்து அவர்கள் சந்தோஷமாக அநாதசாலைக்குப் பணங்கொடுக்க மனங்கொள்ளமாட்டார்களோவாம்.

* இந்துசமய அபிமானிகளைப் பணங்கொடுக்கும் வலையில் அகப்படுத்துவதற்காகக் கிறீஸ்தசமயத்தவரின் வலையை இழுத்துக் கருமம்பார்ப்பது முறையாகாதாம்.

* கிறீஸ்த சமயத்தவரின் வலையை இழுத்தாவது ஒரு இந்துப்பெண் அநாதசாலையைக் கட்டியெழுப்புமிடத்து அதுவும் கிறீஸ்தவர்களுக்கே பெருமையாகுமாம்.

* கிறீஸ்தவர்களைச் சுரண்டிக் கருமம்பார்ப்பது திரு. சு. இ. அவர்களுக்கும் ஒரு பரவணிப்பழக்கம் ஆகிவிட்டதாம்.

* சேர் பறன் ஜயதிலக அவர்கள் காலகதியடைந்த முதலாம்வருட நிறைவுதினம் கொழும்பிலே சென்ற ஞாயிறுவாரம் கொண்டாடப்பட்டதாம்.

* "இவர் (சேர் பறன்) தான் கல்வி பயின்ற கிறீஸ்தபள்ளிக்கூடத்தின் நன்றியறிதலுள்ள ஓர் மாணவர்" என்று அந்த டொக்டர் மலலசேகர அக்கொண்டாட்டத்திலே சொன்னுராம்.

* இலங்கைப் பெரிய மதுவிலக்கு அபிமானியாகிய சேர் பறன் ஜயதிலகவைப் பாராட்டிய இந்தடொக்டர் மலலசேகரதான், கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளுக்குக் குடிக்கப்பழக்குகின்றனவென அன்று புகார்செய்தவராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளு சங்கதிகள்

—நாஸிய தலைவர்களிலே மிகவிசேஷப்பட்டவர்களாய் இன்னமும் அகப்படாதிருப்பவர்கள் நாஸியஅரசாங்க பிறதேசகாரிய மந்திரியாயிருந்த ஜூவக்கீம்வொன் றிப்பென்திறெப் என்பவரும், ஒரு சிறு தொகையான பீல்ட்-மாஷல்களுமேயாம் இவர்கள் தப்பியோடச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாம். அதனால், எந்தவிதமும் அகப்படுவார்களாம்.

—ஜேர்மன் பீல்ட்-மாஷல்களான பிரதம சேனபதிகளிலே இன்னமும் கண்டறியப்படாதிருப்பவர்கள் வால்ற்றர் மொடெல், பிறிற்ஸ் மான்ஸ்ரீன், ஜோர்ஜ் குவெச்லர், ஹென்றிக் புறேச்சிற்ஸ் எனும் நால்வருமேயாம். இவர்கள் ஒவ்வோர் போர்முனையிலே பிரதம சேனபதிகளாய் இருந்தார்கள்.

—சமீபகாலத்தில்நடந்த யுத்தத்திலே யப்பானிய பெரிய அட்மிறல்களில் எழுவர் இறந்துபோனதாக ரோக்கியோநகர் ஆகாயவசனி அறிவிக்கின்றது. இவர்களுடன் கடந்த ஒருவருடகாலத்துள் யப்பானிய கடற்படைப் பெரிய அட்மிறல்களாய் நூறுபேர் இறந்துபோயிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

—யுத்தகாலத்திலே கண்டுபிடிக்கப்பட்டவைகளிலெல்லாம் மகா விசேஷப்பட்டது டி. டி. ரி. என்ற மருந்துதானும். அத்தாலே பசிபிக்சமுத்திர அரங்கங்களில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஆஸ்திறேலிய சேனவீரர்களில் மலேரியாகண்டு வருந்துவார்வீதம் நூற்றுக்கு ஒன்றிலும் குறைந்ததாம்.

—பிலிப்பைன் தீவுகளின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரை யப்பானியர் கைப்பற்றியபின்னர் அவர்களின் கைப்படாமல் 1942-ம்ஆண்டு மாசிமாசம் அங்கு மனிலாக்குடாவின் வாயிலில் ஆழ்த்திவிடப்பட்ட 20 லட்சம் பவுண் பெறுமதியான வெள்ளிக்கட்டிகள் சென்ற வியாழக்கிழமை திரும்பவும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

—பசிபிக்சமுத்திர போர்அரங்கங்களிலே யுத்தஞ்செய்கின்ற அமெரிக்க சேனவீரர்களின் தொகை ஒருவருடத்தில் இருமடங்காக அதாவது 70 லட்சமாக ஆக்கப்படுமென்றும், ஐரோப்பாவில் போராடிய அமெரிக்க சேனவீரர்களில் 35 லட்சம் பேர் அங்கு அனுப்பிவைக்கப்படுவார்களென்றும் பிரசாதிபதி ட்றூமன் தெரிவித்திருக்கின்றார்.

—அமெரிக்க போர்வீரர்களிலே இந்த யுத்தத்தில் இறந்தவர்களும், காயமடைந்தவர்களும், காணமற்போனவர்களும், யுத்தகைதிகளானேரும் 10,02,877 பேரென்று பிந்தியஅறிக்கை தெரிவிக்கின்றது. இவர்களிலே இறந்தவர்கள் 2,27,097 பேரும் காணமற்போனவர்கள் 63,445 பேருமாம்.

—ஹிற்லரின் நாஸிய அரசாங்கத்திலே பிறதேசகாரிய மந்திரியாயிருந்த ஜூவக்கீம் வொன் ஹிப்பென்திறெப் என்பார் வடஇத்தாலியிலே ஏதோவொரு இடத்தில் மறைந்துகொண்டிருப்பதாகவும், அவரைக் கண்டுபிடிப்பதற்காக ஐக்கிய படைகள் விசாரணைநடத்தி வருவதாகவும் செய்திகிடைத்திருக்கிறது.

—1923-ம்ஆண்டு நிகழ்ந்த பெரியபூகம்பத்தின்போது யப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோ நகருக்கு ஏற்பட்ட அழிவுசேதத்திலும் தற்போது விமானங்களின் வெடிகுண்டுவீச்சாலே அதற்கு ஏற்பட்டிருக்கும் அழிவுசேதம் மிகப்பெரிதென்று யப்பானிய செய்திஸ்தாபனம் சென்ற சனிக்கிழமை அறிவித்திருக்கிறது.

—அமெரிக்க ஐக்கியதேசத்தின் மேற்குக் கரைநாடுகளிலே யப்பானியர் பலூன் வெடிகுண்டுகளைச் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த வெடிகுண்டுகளுள் ஒன்றாலே சமீபத்தில் ஒரு மனுஷியும் ஐந்து பிள்ளைகளும் கொல்லப்பட்டார்களென்று அமெரிக்கஅரசின் யுத்த உபமந்திரியாரான திரு. பற்றேர்சன் அறிவிக்கின்றார்.

—திரு. சேர்ச்சில், பிரசாதிபதி ட்றூமன், மாஷல் ஸ்ராலின் ஆகிய முப்பெருந் தலைவர்களும் சமீபத்திலே கூடும்போது ஜேர்மனியை முற்றாக நிராயுதபாணியாக்குவதற்கும், உலகசமாதானத்தை நிலைநாட்டுவதற்குமாகப் பிரித்தானி, அமெரிக்க ஐக்கியதேசம், ருஷியா எனும் மூன்று தேசங்களினதும் ஐக்கிய உடன்படிக்கைபற்றிக் கலந்து ஆலோசிப்பார்களாம்.

—பேர்ளின்நகர் மேயராகச் சோவியற் அரசினர் ஆர்தர் வேர்ணர் எனும் ஜேர்மனியரை நியமனஞ்செய்திருக்கின்றனர். அங்கே ஓர் ருஷிய போர்வீரனின் அல்லது ஓர் ருஷிய உத்தியோகஸ்தனின் உயிரைப் போக்குகிறதானல் முன்னர் நாஸியகட்சியிற் சேர்ந்திருந்த 50 பேர் சுட்டுக்கொல்லப்படுவார்களென்று இவர் பிரசித்தஞ் செய்திருக்கின்றார்.

—ருயிட்டர் தந்திநிருபர் அறிவிக்கிறபடி 1923-ம்ஆண்டின் பயங்கரபூகம்பத்தாலே ஏறக்குறைய அரசாங்க, வர்த்தக காரியாலயங்கள், வங்கிகள், றெயில்வே ஸ்றேஷன்கள் எல்லாம் உட்பட ரோக்கியோநகரின் மூன்றில் இருபாகமும் பாழாயிற்று. அறுபதினாயிரம் சனங்கள் கொல்லப்பட்டு உயிர்துறந்தார்கள்.

## வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கம்

இச்சங்க நிர்வாகசபைக்கூட்டம் சென்ற வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. முந்திய கூட்டவரலாறு வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பெற்றது. பின்னர் மேல்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 30 வயதுள்ளவர்களும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுமான ஒவ்வொரு ஆசிரியரையும் உபகாரவேதனத்திற்கு உரித்துடையவர்களாகப் பதிவுசெய்தல் வேண்டும் என இச்சங்கம் வித்தியாபகுதியை வேண்டுகின்றது.

2. தமிழாசிரிய தராதரப்பத்திரம்பெற்று 8 வருடத் திருப்தியான சேவைக்குப்பின்பு 1-ம்வகுப்புப்பத்திரம் பெறும் (பயிற்சிபெறாத) ஆசிரியர்களுக்கு மூன்று வருடச்சேவையின்பின் 2-ம்வகுப்புத் தராதரப்பத்திரம்உள்ள ஆசிரியர்களின்உயர்ச்சிச்சம்பளம்போலவே (வருடம் ரூபா 24) இருக்கும் உயர்ச்சியை குறைந்தளவு ரூபா 36 ஆக ஆக்கவேண்டும் என இச்சங்கம் வித்தியாபகுதியை வேண்டுகின்றது.

3. ஆசிரிய தராதரப்பத்திரம்பெற்று மூன்றுவருட சேவையிலீடுபட்டு 2-ம்வகுப்புத்தராதரப்பத்திரமுடையஆசிரியர்கள் பயிற்சிச்சாலையில் சேரவிரும்பின் அவர்களுக்கு ஒருவருடப்பயிற்சி அளிக்கப்பெறல் வேண்டுமென இச்சங்கம் வித்தியாபகுதியை வேண்டுகின்றது.

4. சிறிய பாடசாலைகளில் (5 ஆசிரியர்களில்லாத) உள்ள புதியநியமனம் பெற்ற தலைமைஆசிரியர்களுக்கும் பெரிய பாடசாலைகளிலுள்ள தலைமையாசிரியர்களுக்குஉரிய சம்பளவிகிதமாகவே சம்பளம் கொடுபடல்வேண்டும் என இச்சங்கம் வித்தியாபகுதியை வேண்டுகின்றது.

பின்னர் இச்சங்கம் ஆடிமாசம் 16-ந்திகதிக்குப் பிந்தாமல் மத்திய சங்கீத விழாவை நடத்துவதென முன்னர்செய்த தீர்மானத்தை எக்காரணங்களையிட்டும் மாற்றியமைக்க விரும்பவில்லையென்றும், சங்கீதவிழாவில் பங்குபற்றுவோருக்குப் போக்குவரவால் ஏற்படும்செலவில் ஓர் பகுதி கொடுபடுமென்றும், விழாவில்பங்குபெறும் பாடசாலைகளுள் முதன்மையாக வரும் பாடசாலைக்கு ஸ்ரீ சந்திரசேகரா போட்டிக்கேடயப்பரிசு வழங்கப்பெறுமென்றும் கிளைச்சங்கக் காரியதரிசிகளுக்கு அறிவிக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பெற்றது.

காரியதரிசி


## கற்பிட்டி மகோற்சவம்

கற்பிட்டி, அர்ச். சிந்தாயாத்திரைமாதாவின் ஆலயத்திலே ஆண்டுதோறும் கொண்டாடப்படும் வைகாசி மகோற்சவம் இவ்வாண்டும் சென்றமதி 20-ந்திகதி ஞாயிறுவாரம் சிறப்பாய் நடந்தேறியது. 8-ந்திகதி ஐரோப்பிய வெற்றித்தின ஆராதனைக்குப்பின் கொடியேற்றத்துடன் விழாக்கள் ஆரம்பமாகிப் பதினொருதினங்களாகப் பரிமளிப்பாய் நடந்தேறின. 19-ந்திகதி சனிக்கிழமை இரவு பங்குக்குரவர் வண. மாட்டீன் பறுநாந்து சுவாமியாரால் சோதிமயமாய் விளங்கிய பீடத்தின்கண் மாலையாராதனை பாடப்பட்டது. பயிற்சிவல்ல பலகத்துறைப் பாடகரினதும், பாடசாலைப் பாலர்களினதும் கீதங்கள் பக்திப்பரவசமூட்டும் அத்தகைய சிறப்புற்றிருந்தன. அதன்மேல் மாதாவின் திருச்சுரூபம் சிங்காரத்தேரில் பக்தர் குழாம் புடைசூழ, பாண்டுவாத்தியம்முழங்க ஊர்வலம் வரலாயிற்று. மறுநாட்காலை பாடற்பூசைநடந்து பின்னர் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பலகத்துறைவாசியும், பாரிய செல்வருமான திரு. டபிள்யு. மார்க்கு பறுநாந்து அவர்கள் வழமையாகச் சிலவருடங்களாகச் சிறப்பாய்க் கொண்டாடிய இம்மகோற்சவம் இவ்வாண்டு அன்னாரின் புதல்வரான திரு. டபிள்யு எம். செபஸ்தியான் பறுநாந்து அவர்களாலே கொண்டாடப்பட்டது.

கடிதர்


## இருட்டுச் சந்தையை அகற்ற

பிறிமியர் ஸ்டோரை நாடுங்கள்




விலைக்கட்டுப்பாட்டுச் சாமான்களை கட்டுப்பாட்டு விலைக்கும் மற்றும் சாமான்கள் மட்டானவிலைக்கும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதார்த்தமான பண்டகசாலை.

பிறிமியர் ஸ்டோர்ஸ்

பெரியதெரு, யாழ்ப்பாணம்

PREMIER STORES

Main Street, JAFFNA.



## நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்

நீங்கள் தேகாரோக்கியமும் தீர்க்காயுளும்பெற்று வாழவிரும்புகிறீர்களா? உங்களுக்கு எல்லாப்பாக்கியங்களிலும் சிறந்த பிள்ளைப்பாக்கியம் வேண்டுமா? உங்கள் புத்திரர் புத்திரிகளுக்கு உகந்த ஓர் சிறுபிள்ளை வைத்தியரை அறிய ஆசிக்கிறீர்களா? யாழ்ப்பாணம் பெரியதெரு, நம். 160, சில்லாலை முத்துவைத்தியசாலையை நாடுங்கள். அங்கே எவர் எந்நோயால் வருந்துகிறாரோ அவர் அந்நோயைத்தீர்க்கும் ஔஷதத்தைப் பெற்றுக்கொள்வர்.

இங்ஙனம்,

மு. இ. பிரான்சீஸ்பிள்ளை உபாத்தியாயர்

தெல்லிப்பளை.


## சற்பிரசாதத் திருநாள்

நீர்கொழும்புக்கொச்சிக்கடையைச்சேர்ந்த தூவணைப்பதி அர்ச். தம திரீத்துவத்தின் ஆலயத்திலே சென்றமாசம் 27-ந்திகதி ஞாயிறுவாரம் பரம திரீத்துவத்தின் திருநாளன்று சற்பிரசாதத்திருநாளும் இனிதே கொண்டாடப்படலாயிற்று. முந்திய ஐந்துதினங்களிலும் ஆயத்தஉற்சவங்கள் சிறப்பாக நடந்தேறின. சனிவாரம் இரவு 8. 30 மணிக்கு எமது கட்டளைக்குரவர் வண. ஏ. டொன் வின்சென்ற் சுவாமியாரால் மாலையாராதனை பாடப்பட்டது. திருநாளன்றுகாலை ஆயிரக்கணக்கானோர் ஆலயத்தில் குழுமியிருக்க இரு பூசைகள் நிறைவேறின. பெருந்தொகையானோர் திருவிருந்தருந்தினார்கள். பூசை முடிந்ததும் விசித்திர வேலைப்பாடுகள் அமைந்து நறுமலர்கள்செறிந்த பீடத்திலே தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டது. சந்திப்பிற்குக் குறிக்கப்பட்ட குழுவினர் தத்தம் சந்திப்புகளைப் பத்தியருட்சியோடும், இனிய கீதங்களோடும் நடத்தினர். பிற்பகல் 4. 30 மணியளவில் கந்தவளைக் கட்டளைக்குரவர் வண. வெத்தசிங்க, நஞ்சுண்டான்கரைக் கட்டளைக்குரவர் வண. ஆர்தர் மாட்டீன், பலகத்துறைக் கட்டளைக்குரவர் வண. நிஸ்ஸன் சுவாமிமாராலும், எமது கட்டளைக்குரவராலும் மாலையாராதனை பாடப்பெற்றது. அதன்மேல் வண. நிஸ்ஸன் சுவாமியாரால் திவ்விய நற்கருணையைப் பற்றித் தமிழில் சிறந்த பிரசங்கமொன்று செய்யப்பட்டது. பின்னர் வண. வெத்தசிங்க சுவாமியார் சற்பிரசாதநாதரை ஏந்திவர, ஏனையகுரவர்கள் மருங்கேவர, பாடசாலை மாணவர் மாணவிகள் பலவித கீதங்கள் பாடிவர, பாடகர்குழாம் முன்னேக, பாலியர் புஷ்பாஞ்சலிசெய்ய ஆலயத்தைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த அழகிய முப்பந்தர்களிலும் ஆசீர்வாதம் அருளப்பெற்றுத் திருநாள் முடிவெய்திற்று.

கடிதர்

—ஒல்லாந்திலே நாஸிய இரகசியப் பொலிஸ் தலைவனாயிருந்த ஜெனறல் ஹான்ஸ் றேட்ரர் என்பவனும் தென்மார்க்கிலே முதலாம்நம்பர் நாஸிய யுத்த குற்றவாளியென்று கொள்ளப்படுகின்ற ஜெனறல் லின்டெமனும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

## சற்பிரசாதத் திருநாள்

நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு அர்ச். செபஸ்தியார் ஆலயத்திலே இம்மதி 3-ந்திகதி சற்பிரசாதத்திருநாள் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. காலைப் பூசையிலும், பாடற்பூசையிலும் திருஇருதயச்சபையார் உட்படப் பெருந்தொகையானோர் திருவிருந்தருந்தினர். காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரையில் பிரசித்த ஆராதனைக்காகத் தேவநற்கருணை எழுந்தேற்றம்பண்ணி வைக்கப்பட்டது. திரு இருதயச்சபை ஆடவர்களின் ஆராதனை மணிநேரம் முடிந்ததும் ஆலயவளவிலே துணைக்குரவர் தலைமையில் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டார்கள். பிற்பகல் 5 மணிக்கு வண. எட்வாட், வண. சொயிசா குருப்பிரசாதிகள் துணைபுரிய வண. முத்துப்பிள்ளை சுவாமியாரால் மாலையாராதனை பாடப்பட்டது. அதன்மேல் சற்பிரசாதபவனி ஆரம்பமாயிற்று. மாணவர் மாணவிகள், திருஇருதயசபை ஆடவர்கள் பெண்மணிகள், மற்றும் பன்னூற்றுக்கணக்கானபேர்கள் திருஇருதயக்கொடிகளுடன் இருநிரையேசெல்ல, இருபது சிறுவர் நற்கருணைநாதருக்கு முறைமுறையாகப் புஷ்பாஞ்சலிசெய்ய, பூசைப்பரிசாரகர்கள் மாறிமாறித் தூபங்காட்டிச்செல்ல, பாடகர் பக்திரசக் கீதங்கள் படித்துச்செல்ல, பவனி சிறப்பாகநடந்து, சிங்காரமாய் அமைக்கப்பெற்றிருந்த ஐந்து மண்டபங்களிலும் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. கடைசியாய் ஆலயத்தில் தெதேயும்பாடி அருளப்பெற்ற சற்பிரசாத ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு பக்தர்கள் தத்தம் இல்லங்களுக்கேகினார்கள்.

கடிதர்

—அன்று பேர்ளின்நகரில் நிறைவேறிய உடன்படிக்கையாலே ஹிற்லர் பலவந்தமாகச் சேர்த்துக்கொண்ட ஆஸ்திரியாவையும், சுடெற்றன்லாந்தையும் ஜேர்மனி இழந்துபோகின்றது. அதன் ஆயுதபலங்கள் கலைத்துவிடப்படும். அதன் கப்பல்கள், விமானங்கள், யுத்ததொழிற்சாலைகள் ஆதியன பறிமுதலாக்கப்படும்.

—பேர்ளின்நகரிலே சென்ற 5-ந்திகதி பிரித்தானிய, அமெரிக்க, ருஷிய, பிராஞ்சிய பிரதிநிதிகளுக்கிடையில் நடந்தேறிய உடன்படிக்கை ஒன்றாலே ஜேர்மனி 1937-ம்ஆண்டு மார்கழிமாசம் 31-ந்திகதி எப்படியிருந்ததோ அதே பழைய எல்லைகளைக்கொண்டதாய் மறுபடியும் இருக்குமாறு செய்துவிடப்பட்டிருக்கிறது.

Printed and published for the Proprietor by Bastiampillai Santiagoepillai residing 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises Main Street Jaffna on Friday 8, June 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org